# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 25 | 4 Pages | 26.08.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 25 | 4 பக்கங்கள் | 26.08.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |

## காவிரியில் தண்ணீர் திறப்பு: தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று உத்தரவு பிறப்பிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு



டெல்லி, ஆக. 26

தமிழகத்திற்கு போதுமான தண்ணீரை காவிரியில் இருந்து திறந்துவிட, கர்நாடக அரசு மறுத்த நிலையில் தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த மனுவை இன்று பி ஆர் கவாய் தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்தது. அப்போது, தினசரி 24 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று உத்தரவு பிறப்பிக்க உச்சநீதிமன்றம் அமர்வு மறுத்துவிட்டது.மேலும், ''இந்தவிஷயத்தில்எங்களுக்குஎந்தநிபுணத்துவமும் இல்லை. கூடுதல் சொலிட்டர் ஜெனரல், இதற்கான ஆணையம் வருகிற திங்கட்கிழமை கூடுகிறது. அப்போது அடுத்த 15 நாட்களுக்கு திறந்துவிடக் கூடிய தண்ணீர் அளவு குறித்து முடிவு செய்யப்படும் எனத் தெரிவித்துள்ளார். காவிரி மேலாண்மை ஆணையம் தண்ணீர் திறந்து விடுவதற்கான வழிமுறைகள் பின்பற்றபட்டதா? இல்லையா? என்பது குறித்து அறிக்கை சமர்பிப்பது பொருத்தமானதாக இருக்கும் என கருதுகிறோம்'' எனத் தெரிவித்துள்ளது. முன்னதாக இந்த வழக்கில் கர்நாடாக அரசு பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு: நடப்பாண்டு வழக்கமான மழைப்பொழிவு இருந்ததாக தவறான அனுமானத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு மனு தாக்கல்செய்துள்ளது.25சதவீதஅளவுக்குமழைப்பொழிவுகுறைந்திருப்பதாக தமிழ்நாடு அரசின் மனுவிலும், கர்நாடகத்திலுள்ள 4 அணைகளுக்கான நீர்வரத்து 42.5 சதவீதம் குறைந்திருப்பதை காவிரி நீர் மேலாண்மை ஆணையமும் பதிவு செய்துள்ளது. கர்நாடகத்தின் அணைகளுக்கான நீர்வரத்து ஆகஸ்டு 8ந்தேதி நிலவரப்படி 42.5 சதவீதம் குறைந்திருப்பதால், தமிழ்நாட்டுக்கு எஞ்சியிருக்கும் காலத்துக்கு மாதந்தோறும் திறந்துவிட வேண்டிய நீர் குறித்த உத்தரவுகளைமுழுமையாகஅமல்படுத்துவதைஉறுதிசெய்யகாவிரிமேலாண்மை ஆணையத்துக்கு உத்தரவிட முடியாது. தமிழ்நாட்டில் குறுவை சாகுபடி காலம் ஜூன் 12ந்தேதி முதல் செப்டம்பர் இறுதி வரை ஆகும். இதற்கு 37.27 டி.எம்.சி நீரே போதுமானது. காவிரி மேலாண்மை ஆணையத்தால் மதிப்பிடப்பட்ட இந்த கொள்ளளவை சுப்ரீம் கோர்ட்டு 2018ம் ஆண்டு தீர்ப்பில் மாற்றம் செய்யவில்லை. மேட்டூர்அணையில் ஆகஸ்டு 23ந்தேதி நிலவரப்படி 21.655 டி.எம்.சி. நீர் உள்ளது. நாள்தோறும் 10 ஆயிரம் கன அடி நீரை கர்நாடக அரசு திறந்து வருகிறது. எனவே தமிழ்நாட்டில் போதுமான நீர் உள்ளதால், இந்த விவகாரத்தில் அவசரம் காட்ட வேண்டியதில்லை. காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பிக்கும் உத்தரவுகளை கர்நாடகம் செயல்படுத்தி வருகிறது. கடந்த 11ந்தேதி நடைபெற்ற காவிரி மேலாண்மை ஆணையத்தின் 22வது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மறுஆய்வு செய்யக்கோரி கர்நாடக அரசு ஆணையத்தில் மனு செய்துள்ளது. மேகதாது அணை திட்டத்துக்கு தமிழ்நாடு அரசின் தேவையற்ற எதிர்ப்பே தற்போதைய பிரச்சினைக்கு காரணம். மேகதாது அணை கட்டப்பட்டிருந்தால் 13 டி.எம்.சி அளவுக்கான கூடுதல் நீர் தமிழ்நாட்டில் ஜூன்ஜூலை மாதத்தில் ஏற்பட்ட வறட்சியை தடுக்க உதவியிருக்கும். எனவே நீதியின் நலன் கருதி, தமிழ்நாடு அரசின் மனுவை நிராகரிக்க வேண்டும். இவ்வாறு அந்த பிரமாண பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

## சிறுத்தைகள் தாக்குதலை தடுக்க திருப்பதி மலைப்பாதையில் வேலி அமைக்க கோரி ஐகோர்ட்டில் வழக்கு



திருப்பதி, ஆக. 26

திருப்பதி மலை பாதையில் செல்லும் பக்தர்களுக்கு உயிருக்கு பாதுகாப்பு இல்லாததால் இரும்பு வேலி அமைக்க வேண்டும் என திருப்பதி தேவஸ்தான முன்னாள் அறங்காவலர் குழு உறுப்பினர் பானு பிரகாஷ் ஷெட்டி ஆந்திர ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது: கடந்த சில நாட்களுக்கு முன்பு தனது பெற்றோருடன் நடந்து சென்ற 3 வயது சிறுவனை சிறுத்தை ஒன்று கவ்வி சென்றது. இதேபோல் லக்ஷிதா என்ற 6 வயது சிறுமியை இழுத்துச் சென்று கடித்து கொன்றது. தற்போது மலை பாதை அருகே சிறுத்தை, கரடி நடமாட்டம் உள்ளது. இதனால் பக்தர்கள் அச்சத்துடன் நடை பாதையில் நடந்து செல்கின்றனர். எனவே நடைபாதை முழுவதும் இரும்பு வேலி அமைக்க திருப்பதி தேவஸ்தானம் மற்றும் வனத்துறையினருக்கு உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறியிருந்தார். இந்த மனு மீதான விசாரணை வரும் திங்கட்கிழமை நடைபெறும் என தெரிவித்தனர்.

## விவேக் ராமசாமிக்கு பெருகும் ஆதரவு: அதிபர் தேர்தல் பிரசாரத்திற்கு ரூ.4 கோடி வசூல்



அமெரிக்கா, ஆக. 26

2024ல் நடைபெறவிருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலுக்காக அந்நாட்டின் இரு பெரும் கட்சிகளான குடியரசு கட்சியும், ஜனநாயக கட்சியும் தயாராகி வருகின்றன. இதன் ஒரு பகுதியாக கிராண்ட் ஓல்ட் பார்ட்டி (GOP) என அழைக்கப்படும் குடியரசு கட்சியின் வேட்பாளராக யாரை அறிவிப்பது என அக்கட்சியில் தீவிர பரிசீலனை நடந்து வருகிறது. டிரம்ப் ஆதரவாளர்களான புளோரிடா கவர்னர் ரான் டிசான்டிஸ், தொழிலதிபரும் இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான விவேக் ராமசுவாமி, முன்னாள் அமெரிக்க தூதர் நிக்கி ஹேலி, முன்னாள் அமெரிக்க துணை அதிபர் மைக் பென்ஸ், வட டகோடா மாநில கவர்னர் டக்ளஸ் பர்கம், செனட்டர் டிம் ஸ்காட் மற்றும் நியூ ஜெர்ஸி கவர்னர் க்ரிஸ் க்ரிஸ்டீ ஆகியோருடன் டிரம்பை எதிர்க்கும் அர்கன்ஸாஸ் மாநில முன்னாள் கவர்னர் அஸா ஹட்சின்ஸன் உட்பட பல வேட்பாளர்கள் குடியரசு கட்சியிலேயே களத்தில் உள்ளனர். குடியரசு கட்சியின் வேட்பாளர்களை மட்டும் உள்ளடக்கிய ஒரு விவாத நிகழ்ச்சி, ஒரு தனியார் செய்தி தொலைக்காட்சியால் அமெரிக்காவின் விஸ்கான்ஸின் மாநிலத்தில் உள்ள மில்வாக்கி பகுதியில் நடத்தப்பட்டது. இதில் அக்கட்சியின் சார்பில் அதிபர் தேர்தலில் நிற்க விரும்பும் 8 வேட்பாளர்கள் பங்கேற்றனர். ஆனால் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கலந்து கொள்ளவில்லை. இதனை ஒரு பிரசார மேடையாக பயன்படுத்தி கொள்ளும் வகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தங்கள் நிலைப்பாடுகளை குறித்த கருத்து தெரிவித்தவர்களில் விவேக் ராமசாமியின் சிந்தனைகளும், செயல் திட்டங்களும் பேசுபொருளானது. இந்த விவாத நிகழ்ச்சிக்கு பின்னர் அங்குள்ள பல ஊடகங்கள் அவரை பாராட்டி வரும் நிலையில், கூகுள் தேடலில் அதிகம் தேடப்பட்ட நபராகவும் விவேக் ராமசாமி இருந்தார். விவேக்கிற்கு மக்கள் ஆதரவு பெருகி வருவதை குறிக்கும் விதமாக கட்சிக்கான நிதியளிப்பில் ஏராளமானோர் முன்வந்து நன்கொடையளித்து வருகின்றனர். நிகழ்ச்சி முடிந்த சுமார் ஒரு மணி நேரத்திலேயே விவேக் ராமசாமியின் பிரசாரத்திற்கு ஆதரவாக சுமார் ரூ.4 கோடி ரூபாய் ($450000) இதுவரை நன்கொடை கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. பிரிட்டனில் இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் பிரதமரானது போல, அமெரிக்காவிலும் ஒரு இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் அதிபர் ஆனால், வெள்ளையர்களால் ஆளப்பட்ட நாட்டை சேர்ந்தவர்கள் வெள்ளையர்களின் நாட்டை ஆள்கிறார்கள் எனும் சிறப்பு இந்தியாவிற்கு கிடைக்கும் என சமூக வலைதளங்களில் கருத்துக்கள் பரிமாறப்படுகிறது.

# இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலம் தமிழ்நாடு தஞ்சையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



தஞ்சாவூர், ஆக. 26

தமிழ்நாட்டில் மாநகராட்சி அரசு தொடக்க பள்ளிகளில் 1 முதல் 5ம் வகுப்பு மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் மகத்தான திட்டத்தை கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 15ந் தேதி மதுரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். என்னுடைய கனவு திட்டங்களில் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கியது முக்கியத்துவம் வாய்ந்தது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் கொண்டார். முதலமைச்சரின் இந்த கனவு திட்டத்தால் மாணவமாணவிகள் மிகவும் பயன் அடைந்தனர். பெற்றோர்களும் எங்களது பிள்ளைகள் தற்போது பள்ளிக்கு சென்று காலை உணவு சாப்பிட்ட பிறகு வகுப்புகள் கவனிப்பதால் அவர்களால் நல்லபடியாக படிக்க முடிக்கிறது என்று மகிழ்ச்சி அடைந்தனர். இந்த நிலையில் கடந்த 15ந் தேதி சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியேற்றி வைத்து பேசும்போது, காலை உணவு திட்டம் இனி அனைத்து அரசு பள்ளிகளிலும் 1 முதல் 5ம் வகுப்பு மாணவமாணவிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும் என்றார். அதன்படி இன்று காலை நாகை மாவட்டம் திருக்குவளையில் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி படித்த ஊராட்சி பள்ளியில் காலை உணவு திட்ட விரிவாக்கம் தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கி காலை உணவு விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைத்து மாணவமாணவிகளுக்காக தயார் செய்யப்பட்ட காலைஉணவைஅவர்களுடன் அமர்ந்து சாப்பிட்டார். மேலும் அவர்களுக்கு தன் கைப்பட பரிமாறினார். அப்போது அருகே அமர்ந்திருந்த மாணவமாணவிகளிடம் உங்களது பெயர் என்ன? எந்த ஊர்? எந்த வகுப்பில் படிக்கிறீர்கள் என அன்புடன் விசாரித்தார். காலை உணவு நன்றாக இருக்கிறதா? என கேட்டு நான் உணவு ஊட்டி விடவா என்றார். மாணவர்கள் சாப்பிட்டு முடிக்கும் வரை அவர்களுடனே அமர்ந்திருந்தார். பின்னர் நான் யார்? என கேட்க, அதற்கு மாணவர்கள் நீங்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என உற்சாகத்துடன் கூறினர். தொடர்ந்து மாணவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இனிப்புகள் வழங்கி பூக்கள் கொடுத்தார். இதையடுத்து பள்ளியை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது பள்ளியில் செய்யப்பட்டுள்ள மேம்பாட்டு பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் ஜானிடாம் வர்க்கீஸ் எடுத்து கூறினார். பின்னர் பள்ளி வளாகத்தில் காலை உணவு திட்டம் விரிவாக்கம் தொடர்பாக விழா நடைபெற்றது. அரசு முதன்மை செயலாளர் செந்தில்குமார் வரவேற்றார். பின்னர் உணவு தயார் செய்யப்படும் விதம் குறித்தும், மாணவர்களுக்கு பரிமாறப்படும் விதம் குறித்த காலை உணவு திட்டம் குறும்படம் வெளியிடப்பட்டது. இதையடுத்து விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: இன்று வாழ்வின் பொன்னாள். காலை உணவு திட்டத்தை விரிவாக்கம் செய்து வைத்திருப்பது எனக்கு மன நிறைவை தருகிறது.திருக்குவளையில்கருணாநிதி படித்த பள்ளியில் மகத்தான திட்டத்தை தொடங்கி வைத்ததில் பெருமைப்படுகிறேன். திருக்குவளையில் உதித்த சூரியன் (கருணாநிதி) இந்தியா முழுவதும் பிரகாசமாக ஒளிர்ந்தது. திருக்குவளையில் கருணாநிதி தொடக்க பள்ளியை படித்து மேல்படிப்புக்காக திருவாரூர் பள்ளியில் சேர்ந்தார். இந்த 2 பள்ளிகள் தான் கருணாநிதியை தலைவராக மாற்றியது. நான் பல திட்டங்களை நிறைவேற்றினாலும் மாணவ செல்வங்களுக்கு காலை உணவு திட்டம் தொடங்கி வைத்தது மிக மனநிறைவை தருகிறது. அதுபோல் அரசு பள்ளியில் படித்து முடித்து தற்போது கல்லூரிகளில் படிக்கும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000, அரசு நகர பஸ்களில் மகளிருக்கு இலவச பயணம், வரும் செப்டம்பர் 15ந் தேதி முதல் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்க உள்ள கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் ஆகியவற்றால் பெண்கள் பயன் அடைந்துள்ளனர். அதைவிட நான் மகிழ்ச்சி அடைகிறேன். சென்னை அசோக் நகரில் நடந்த நிகழ்ச்சியில் நான் பங்கேற்றபோது அதில்கலந்துகொண்ட குழந்தைகள் சோர்வாக காணப்பட்டனர். இதுகுறித்து அவர்களிடம் கேட்டபோது பலரும் காலை உணவு சாப்பிடுவதில்லை என்பது தெரியவந்தது. அப்போது தான் பள்ளிகளில் மாணவர்களுக்கு காலை உணவு திட்டத்தை தொடங்க வேண்டும் என்று முடிவு செய்தேன். இது பற்றி அதிகாரிகளிடம் கேட்டபோது நிதிசுமை ஏற்படும் என கூறினர். ஆனால் மாணவர்களுக்கு நாம் செய்வது நிதி முதலீடு தான். கண்டிப்பாக காலை உணவு திட்டத்தை அமல்படுத்தியாக வேண்டும் என கூறி திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 1955ம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் மதிய உணவு திட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி.மு.க. ஆட்சியிலும் அந்த திட்டம் தொடர்ந்தது. 1971ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் மதிய உணவு திட்டம் செழுமைப்படுத்தப்பட்டு குழந்தைகள், கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து வழங்கும் திட்டமும் கொண்டு வரப்பட்டது. பின்னர் எம்.ஜி.ஆர். ஆட்சி காலத்தில் மதிய உணவு திட்டம் விரிவுப்படுத்தப்பட்டன. எம்.ஜி.ஆருக்கு பிறகு 1989ம் ஆண்டு ஆட்சி நடத்திய கருணாநிதி மதிய உணவில் முட்டைகள், கொண்டைக்கடலை உள்ளிட்ட பல்வேறு உணவு பொருட்களையும் சேர்த்து வழங்கினார். பின்னர் ஆட்சியில் இருந்த ஜெயலலிதாவும் மதிய உணவில் கலவை சாதம் திட்டத்தை அமல்படுத்தினார். இப்படி கடந்த 2021ம் ஆண்டு வரை பள்ளிகளில் மதிய உணவு திட்டம் தான் இருந்தது. ஆனால் அதற் பிறகு எனது தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தான் காலை உணவு திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பெரியார், அண்ணா, கருணாநிதி வகுத்த கோட்பாட்டின் படி சமூக நீதி ஆட்சி நடத்தி வருகிறோம். இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலம் தமிழ்நாடு தான். தற்போது நீட் தேர்வு மூலம் இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றன. மாணவர்களுக்கு படிப்பு மட்டும் தான் பறிக்க முடியாத சொத்து என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் நன்றாக படிக்க வேண்டும். எதை பற்றியும் கவலை கொள்ளாமல் படியுங்கள். நிலவுக்கு விண்கலம் அனுப்பி சாதனை படைத்த விஞ்ஞானிகள் போல் வாழ்க்கையில் உயரத்தை தொட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் ஜானிடாம் வர்க்கீஸ், செல்வராஜ் எம்.பி, நாகை மாலி எம்.எல்.ஏ., தாட்கோ தலைவர் மதிவாணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் கவுதமன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த காலை உணவு விரிவாக்க திட்டம் மூலம் தமிழகம் முழுவதும் 31008 அரசு பள்ளியில் 17 லட்சம் மாணவமாணவிகள் பயன்பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பூரில் சாலையோர வியாபாரிகள் ஆர்ப்பாட்டம்



திருப்பூர், ஆக. 26

திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் எதிரில் சாலையோர வியாபாரிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். முடிவில் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன் குமார் கிரியப்பனவரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் எதிரில் சாலையோர வியாபாரிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு சிஐடியு., சாலையோர வியாபாரிகள் சங்க செயலாளர் பி.பாலன் தலைமை வகித்தார். 20 ஆண்டுகளுக்கு மேலாக வியாபாரம் செய்து வரும் சாலையோர வியாபாரிகளை முறையாக கணக்கெடுத்து அடையாள அட்டை உடனடியாக வழங்க வேண்டும், சாலையோர வியாபாரிகளுக்கு சிறு தொழில் கடன் அலைக்கழிக்காமல் வங்கிகளில் வழங்க வேண்டும், மதுரை, ஈரோடு மாநகராட்சிகளில் சாலையோர வியாபாரிகளுக்கு மாநகராட்சி நிர்வாகமே, தள்ளு வண்டி வழங்கியுள்ளது.

அது போல் இங்கும் வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற சாலையோர வியாபாரிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர். முடிவில் திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் பவன் குமார் கிரியப்பனவரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

# தீரன் சின்னமலை மகளிர் கல்லூரியில் மாணவிகள் சேர்க்கை தொடக்கம்




திருப்பூர், ஆக. 26

திருப்பூர் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்ற புதிய கல்லூரி அவினாசி மங்கலம் தேசிய நெடுஞ்சாலையில் வஞ்சிபாளையத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிற்கான மாணவிகள் சேர்க்கை தொடங்கி உள்ளது. இதில் பி.காம், பி.காம்(சி.ஏ.), பி.பி.ஏ., பி.எஸ்சி. (சி.டி.எப்) பி.எஸ்சி. சி.எஸ். (ஏ.ஐ.) உள்ளிட்ட பாடப்பிரிவுகள் கல்லூரியில் இடம் பெற்றுள்ளன. இந்த நிலையில் கல்லூரியில் சிறப்பு கணபதி ஹோமம் பூஜை திருப்பூர் கொங்கு வேளாளர் அறக்கட்டளை தலைவர் பெஸ்ட் எஸ்.ராமசாமி தலைமையில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இதில் அறக்கட்டளை செயலாளர் கீதாஞ்சலி எஸ். கோவிந்தப்பன், பொருளாளர் ஓ.கே.எம்.கந்தசாமி, துணைத்தலைவர்கள் டிக்சன் ஆர்.குப்புசாமி, பி.வி.எஸ்.பி.முருகசாமி, இணைச் செயலாளர் என்.டி.எம். என்.துரைசாமி, கல்லூரி முதல்வர் ரேச்சல் நான்சி பிலிப் உள்பட அறக்கட்டளை உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், முக்கிய பிரமுகர்கள், கல்லூரி பேராசிரியர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். இக்கல்லூரியின் சிறப்பம்சங்களாக நன்கொடை இல்லாமல் மாணவிகள் சேர்க்கை நடைபெறுகிறது. மேலும் இக்கல்லூரி முதல்வர் 20 ஆண்டுகள் கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்தவர். அனுபவமிக்க பேராசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கல்லூரி முற்றிலும் இயற்கையான சூழலில் அமைந்துள்ளது. கலை, இலக்கியம், விளையாட்டு ஆகியவற்றில் ஊக்குவிக்கப்படுகிறது. அனைத்து பகுதிகளுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்பட்டுள்ளது. 100 சதவீதம் வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என கல்லூரி நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# திருப்பூரில் வரலட்சுமி விரத வழிபாடு



திருப்பூர், ஆக. 26

லட்சுமி கடவுளின் அருளை பெறுவதற்கான வழிபாடாக வரலட்சுமி விரதம் உள்ளது. பெண்கள் தங்களது மாங்கல்ய பலம் நீடிக்க, தைரியம், வெற்றி, குழந்தை பேறு போன்றவற்றை பெறவும் வரலட்சுமி விரதம் இருந்தனர். லட்சுமி கடவுளின் அருளை பெறுவதற்கான வழிபாடாக வரலட்சுமி விரதம் உள்ளது. ஆண்டு தோறும் ஆவணி மாதத்தில் பௌர்ணமிக்கு முன்பாக வரும் வெள்ளிகிழமை அன்று வரலட்சுமி விரதம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதன்படி இந்த ஆண்டுக்கான வரலட்சுமி விரதம் இன்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி பெண்கள் தங்களது மாங்கல்ய பலம் நீடிக்க, தைரியம், வெற்றி, குழந்தை பேறு போன்றவற்றை பெறவும் வரலட்சுமி விரதம் இருந்தனர். திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தில் பல்வேறு வீடுகளில் வரலட்சுமி விரத வழிபாடு நடைபெற்றது. இதற்காக அக்கம் பக்கத்தில் இருக்கும் கன்னி பெண்கள், சுமங்கலி பெண்களை விரத பூஜையில் கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்தனர். நோன்பு பதார்த்தங்களாக பச்சை அரிசி இட்லி, பருப்பு சேர்த்த குழம்பு, ரசம், கறிவகைகள், வடை, சர்க்கரை பொங்கல், பாசி பருப்பு பாயாசம், தேங்காய், பச்சைமிளகாய் உப்பு சேர்த்த பச்சடி, கார கொழுக்கட்டை உள்ளிட்ட பதார்த்தங்களை தயாரித்து வழிபாட்டில் வைத்தனர். இதுதவிர லட்சுமி கடவுளுக்கு மிகவும் பிடித்த பதார்த்தமாக இருந்து வரும் கோசம்பரி தயார் செய்து படையலாக படைத்தனர். எளிமையான முறையில் வரலட்சுமி வழிபாடு செய்ய சிலர் ஐந்து வகையான பழங்கள், ஐந்து வகை மலர்கள் ஆகியவற்றை லட்சுமி கடவுள் முன் சமர்ப்பித்து, லட்சுமி தேவியின் துதி ப்பாடலை பாடி வழிபட்டனர். இதேப்போல் திருப்பூரில் உள்ள கோவில்களிலும் வரலட்சுமி வழிபாடு நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வரின் காலை உணவு திட்டத்தினை செயல்படுத்தியதற்கு ராயவரம் மெயின்ரோடு காதர்பேட்டை மாநகராட்சி பள்ளியில் திருப்பூர் வடக்கு மாவட்டம் பி.எஸ்.பாண்டியன் தலைமையில் திருப்பூர் தெற்கு மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி.அரவிந்த் சார்பில் பள்ளி மாணவர்களுக்கு இனிப்பு வழங்கியபோது எடுத்த படம்.

# விஜயகாந்தின் 71வது பிறந்தநாள்: திருப்பூரில் தே.மு.தி.க.வினர் நலத்திட்ட உதவிகள் அன்னதானம் வழங்கி கொண்டாட்டம்



திருப்பூர், ஆக. 26

திருப்பூர்ஒன்றிய தே.மு.தி.க. சார்பாக பெருமாநல்லூர்கொண்டத்து காளியம்மன் கோவிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது. பெருமாநல்லூர் நால் ரோட்டில் உள்ள கொடிக் கம்பத்தில் தே.மு.தி.க. கட்சி கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள்வழங்கி கொண்டாடினர். மேலும் படிக்க திருப்பூர்: தே.மு.தி.க., நிறுவன தலைவர் விஜயகாந்தின் 71 வது பிறந்தநாளையொட்டி திருப்பூர் மாநகர் மாவட்ட தே.மு.தி.க., சார்பில் கோவில்களில் சிறப்பு வழிபாடு நடத்தியும் கட்சி கொடிகளை ஏற்றியும், ஏழை எளியோருக்கு அன்னதானம், நலத்திட்ட உதவிகள் வழங்கியும் கொண்டாடி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திருப்பூர் ஒன்றிய தே.மு.தி.க. சார்பாக பெருமாநல்லூர் கொண்டத்து காளியம்மன் கோவிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன் ஏற்பாட்டில் திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் விசைத்தறி குழந்தைவேல், பொருளாளர் காளியப்பன், அவைத் தலைவர் சரவணகுமார் ஆகியோருடன் துணை செயலாளர்ஏ.எஸ். அக்பர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து பெருமாநல்லூர் நால்ரோட்டில் உள்ள கொடிக்கம்பத்தில் கட்சி கொடியை ஏற்றி பொதுமக்களுக்கு இனிப்புகள்வழங்கி கொண்டாடினர். அப்போது அந்த வழியாக வந்த பேருந்தில் சென்ற பயணிகளுக்கும் இனிப்புகள் வழங்கினர். அதனைத்தொடர்ந்து பாண்டியன் நகரில் பகுதி செயலாளர் சரவணகுமார் ஏற்பாட்டில் கொடியினை ஏற்றி வைத்த மாவட்ட செயலாளர் விசைத்தறி குழந்தைவேல், ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். இதில் பொட்டு காளியப்பன், மாவட்ட பொருளாளர் ராயபுரம் பா. ஆனந்த், வெள்ளியங்கிரி, பிரபு, வசந்த், யுவராஜ், கிட்டுசாமி உள்ளிட்ட ஏராளமான மாவட்ட, ஒன்றிய, பகுதி, கிளை கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். இதே போல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொண்டர்கள் கோவில்களில் சிறப்பு வழிபாடு செய்தும் ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் வழங்கியும், கட்சி கொடி ஏற்றியும் விஜயகாந்தின் 71 வது பிறந்தநாளை கொண்டாடி வருகின்றனர்.

# ஓ.பன்னீர்செல்வத்துக்கு மேலும் மேலும் பின்னடைவு அரசியல் எதிர்காலம் என்ன? கலக்கத்தில் ஆதரவாளர்கள்



சென்னை, ஆக. 26

அ.தி.மு.க. பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்ட எடப்பாடி பழனிசாமி மதுரையில் பிரமாண்ட மாநாட்டை நடத்தி தனது பலத்தை காட்டியுள்ளார். சுப்ரீம் கோர்ட்டும், தேர்தல் ஆணையமும் எடப்பாடி பழனிசாமியை அங்கீகரித்துள்ள நிலையில் அ.தி.மு.க. பொதுக்குழு தீர்மானங்கள் செல்லாது என்று அறிவிக்கக் கோரி ஓ.பன்னீர்செல்வம் உள்பட 4 பேர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தனர். இந்த வழக்கு விசாரணை முடித்து தீர்ப்பு தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. $1\frac{1}{2}$ மாதங்களுக்கு முன்பே விசாரணை முடிந்து விட்ட நிலையில் இன்று கூறப்பட்ட தீர்ப்பும் எடப்பாடி பழனிசாமிக்கு சாதகமாகவே அமைந்துள்ளது. எடப்பாடி பழனிசாமியின் பின்னால் கட்சியின் மூத்த நிர்வாகிகள் முதல் தொண்டர்கள் வரை அனைவரும் அணிவகுக்கும் நிலையில் தான் பொதுக் குழுவின் சட்ட விதிகளில் திருத்தம் செய்து எடப்பாடி பழனிசாமி பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். ஓ.பி.எஸ். கட்சியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். இது சிறப்பு தீர்மானமாக கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. இது போன்ற தீர்மானங்களை எதிர்த்து தான்ஓ.பி.எஸ். தொடர்ந்த வழக்கு தள்ளுபடி ஆகியுள்ளது. இது எடப்பாடி பழனிசாமிக்கும் அ.தி.மு.க.வினருக்கும் அடுத்த வெற்றியை அளித்து மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. இதனால் அ.தி.மு.க.வினர் மிகுந்த உற்சாகத்தில் உள்ளனர். அதே நேரத்தில் ஐகோர்ட்டின் தீர்ப்பு ஓ.பன்னீர்செல்வத்துக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் ஓ.பன்னீர்செல்வம் தனியாகவே செயல்பட்டு வந்தார். தற்போது டி.டி.வி. தினகரனோடு கைகோர்த்துள்ள அவரது அரசியல் எதிர்காலம் என்ன? என்பது ஐகோர்ட்டு தீர்ப்பால் மிகப்பெரிய கேள்வியாகவே மாறி இருக்கிறது. அ.தி.முக. விவகாரத்தில் ஏற்கனவே கடும் பின்னடைவை சந்தித்து வரும் ஓ.பி.எஸ். இனி என்ன செய்ய போகிறார்? என்கிற கேள்வியும் எழுந்துள்ளது. டி.டி.வி. தினகரனுடன் இணைந்து செயல்பட்டு வரும் ஓ.பி.எஸ். தனிக் கட்சி தொடங்குவாரா? என்கிற கேள்வியும் பரவலாக எழுந்துள்ளது. அடுத்த ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ள நிலையில் ஓ.பி.எஸ்.சின் ஆதரவாளர்கள் திசை தெரியாமல் பயணித்து வருகிறார்கள். இன்றைய ஐகோர்ட்டு தீர்ப்பு ஓ.பி.எஸ். ஆதரவாளர்கள் மத்தியில் மேலும் கலக்கத்தை ஏற்படுத்தி உளளது.

# வெள்ளக்கோவில் கிளைக்கு 10 சுற்று தண்ணீர் பாசனத்திற்கு நடவடிக்கை: ஆலோசனை கூட்டத்தில் முடிவு



காங்கயம், ஆக. 26

கடைமடை பகுதியாக உள்ள வெள்ளக்கோவில் சுற்றுவட்டார பகுதிக்கு, தண்ணீர் வந்து சேர்வதில்லை கிளை வாய்க்காலில் குப்பை, இறந்த கோழிகள் வீசுவதை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பி.ஏ.பி., பாசன திட்டத்தில் கடைமடை பகுதியாக உள்ள வெள்ளக்கோவில் சுற்றுவட்டார பகுதிக்கு, தண்ணீர் வந்து சேர்வதில்லை என்ற விவசாயிகளின் தொடர் ஆதங்கம் எதிரொலியாக மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினர் சுல்தான்பேட்டைதுவங்கி பொங்கலூர், காங்கயம், வெள்ளகோவில் வரை விரிவான கள ஆய்வு நடத்தினர். இதில் காங்கயத்தில் கால்வாயின் இருபுறமும் திடக்கழிவுகள் அதிக அளவில் கொட்டப்பட்டுள்ளன. கால்வாய் மற்றும் கரையோரங்களில் மது பாட்டில், பிளாஸ்டிக் பை அடைந்து கிடப்பதால் நீர் வழித்தடம் தடுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் நேரடியாக கால்வாயில் திறந்து விடப்படுகிறது. பல ஆண்டுகளாக சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் மற்றும் திடக்கழிவுகள், கால்வாயில் வெளியேற்றப்படுவதால், நீரின் தரம் மற்றும் சுற்றுச்சூழல் வெகுவாக பாதிப்படைந்துள்ளது என அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதனால் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் பாசனத்தில் விதிமீறல்களை சரி செய்து 4வது மண்டலத்துக்கு குறைந்தபட்சம் 10 சுற்று தண்ணீர் பாசனத்திற்கு வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். காண்டூர் கால்வாய் அடைப்பு நீக்க நடவடிக்கை எடுப்பது, அடுத்து வரும் 4வது மண்டலத்துக்கு அரசாணை பெறும் போது நீர் வளத்துறையின் செலவினம், நீர் பரிமாற்ற இழப்பு ஆகியவற்றை கருத்துருவில் தெளிவாக குறிப்பிட்டு நீர் வினியோகிக்க நடவடிக்கை எடுப்பது. கிளை வாய்க்காலில் குப்பை, இறந்த கோழிகள் வீசுவதை தவிர்க்க நடவடிக்கை எடுப்பது, காலாவதியான பாசன சபை வாக்காளர் பட்டியலை சரி செய்வது, கிளை வாய்க்கால் பராமரிப்பு, கால்வாய் ஓரம் கம்பிக்கட்டி, கான்கிரீட் தடுப்பு அமைப்பது, பரம்பிக்குளம், சோலையாறு அணை பராமரிப்பு உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பி.ஏ.பி., கண்காணிப்பு பொறியாளர், முதன்மை பொறியாளர் ஆகியோர் பங்கேற்பர் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இதை கண்டித்து, வெள்ளக்கோவில் கிளை (காங்கயம் வெள்ளகோவில்) நீர் பாதுகாப்பு சங்கத்தினர் கூட்டத்தை புறக்கணித்தனர். தங்களது கோரிக்கையை முன்வைத்து பட்டினி போராட்டம் நடத்துவது எனவும் முடிவெடுத்துள்ளனர்.

# விடுதலை சிறுத்தைகள் கட்சியில் பெண்களுக்கு 10 சதவீதம் ஒதுக்கீடு : திருமாவளவன் பேச்சு



மாமல்லபுரம், ஆக. 26

காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மண்டல செயலாளர் வீ.கிட்டுவின் தாயார் நாகம்மாளின் 16ம் நாள் படத்திறப்பு நிகழ்ச்சி மாமல்லபுரத்தில் நடைபெற்றது.

இதில் பங்கேற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கலந்து கொண்டு படத்தை திறந்து வைத்து, மலர்தூவி, மெழுகுவத்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினார். அப்போது அவர் பேசியதாவது: விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் பதவியில், 10 சதவீதம் பெண்களுக்கு என ஒதுக்கியுள்ளோம். இந்திய நாட்டிலேயே எந்தக் கட்சியும் வழங்காத ஒரு வாய்ப்பை பெண்களுக்கு வழங்கியுள்ளோம். பெண்கள் அரசியலுக்கு வெட்கம் இல்லாமல், தைரியமாக வரவேண்டும். இதுதவிர மாற்று சமுதாயம் சார்ந்தவர்களுக்கும் 10 சதவீதம் கொடுத்துள்ளோம் என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் விடுதலை செழியன், இ.சி. ஆர்.அன்பு, சாலமன், ஐயப்பன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# நெல்லிக்குப்பம் அருகே பெண் திடீர் சாவு: போலீஸ் விசாரணை

கடலூர், ஆக. 26

கணவன் மனைவி இருவருக்கும் குடிப்பழக்கம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. மருத்துவ செலவுக்காக பணம் வாங்குவதற்கு சென்றார்.

நெல்லிக்குப்பம்அடுத்த எழுமேடு அகரத்தை சேர்ந்தவர் மல்லிகா (வயது 50). இவரது வீட்டிற்கு உறவினர்கள் சின்னதுரை மற்றும் அங்காளம்மாள் வந்துள்ளனர். இந்தநிலையில் கணவன் மனைவி இருவருக்கும் குடிப்பழக்கம் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

சம்பவத்தன்று இருவருக்கும் குடும்ப தகராறு ஏற்பட்டது. இதனை தொடர்ந்து திடீரென்று அங்காளம்மளுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டது. அப்போது கணவர் சின்னதுரைதங்கள் உறவினர்களிடம் மருத்துவ செலவுக்காக பணம் வாங்குவதற்கு சென்றார். ஆனால் அங்காளம்மாள் திடீரென்று உயிரிழந்தார். இத்தகவல் அறிந்த நெல்லிக்குப்பம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இறந்த அங்காளம்மாள் உடலை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். இது குறித்து நெல்லிக்குப்பம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# நீண்ட நாள் விடுப்பில் இருக்கும் பள்ளி மாணவர்களின் பட்டியல் அனுப்ப உத்தரவு

தாராபுரம், ஆக. 26

பள்ளிகளில் 15 நாட்களுக்கு மேல் விடுப்பில் உள்ளவர்களை பட்டியல் அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. வீட்டிற்கே சென்று பெற்றோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி தொடர்ந்து பள்ளிக்கு வரவழைக்க முடிவு.

பள்ளிகளில் 15 நாட்களுக்கு மேல் விடுப்பில் உள்ளவர்களை இடைநிற்றல்தழுவ வாய்ப்புள்ளவர்களாக கருதி பட்டியல் அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கல்வி திட்டம் சார்பில் இடைநிற்றல் தழுவியோருக்கான சிறப்பு கணக்கெடுப்பு இம்மாத தொடக்கத்தில் மேற்கொள்ளப்பட்டது. வழக்கமாக அரசுப்பள்ளிகளில் மாணவர் சேர்க்கை ஆகஸ்டு 1ந் தேதி வரை நடத்த வேண்டும். இதற்கு பிறகும் பள்ளிகளில் சேராதவர்களை கண்டறிந்து, அவர்கள் தொடர்ந்து கல்வி பெற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சமீபத்தில் சுதந்திர தினத்தன்று நடந்த கிராமசபை கூட்டத்திலும், இடைநிற்றல் இன்றி குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பது குறித்து வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் பள்ளிக்கு தொடர்ந்து 15 நாட்களுக்கு மேல் விடுப்பு எடுத்தவர்களின் பட்டியல் அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. இவர்கள் இடைநிற்றல் தழுவ வாய்ப்புள்ளதால் பள்ளி செல்லா குழந்தைகளுக்கான சிறப்பு கணக்கெடுப்பு திட்டத்தின் வாயிலாக உரிய மாணவர்களின்வீட்டிற்கே சென்று பெற்றோரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி தொடர்ந்து பள்ளிக்கு வரவழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கல்வித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# கொடைக்கானலில் விதிமீறி கட்டப்பட்ட நடிகர்கள் பிரகாஷ்ராஜ், பாபிசிம்ஹா வீடுகள் அளவீடு பணி தொடங்கியது




கொடைக்கானல், ஆக. 26

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அருகேவில்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பேத்துப்பாறை பாரதி அண்ணாநகர் பகுதியில் நடிகர் பிரகாஷ்ராஜ் அரசு அனுமதி பெறாமல் வீடு கட்டி வருவதாகவும், வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் சிமிண்ட் சாலை அமைத்துள்ளதாகவும் புகார் எழுந்தது. மேலும் இதேபகுதியில் நடிகர் பாபிசிம்ஹா அரசு அனுமதியின்றி 3 மாடி கட்டிடம் கட்டி வருவதாக குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர். கொடைக்கானலில் ஜே.சி.பி உள்ளிட்ட கனரக வாகனங்கள் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் நடிகர்களுக்கு மட்டும் சிறப்பு சலுகை வழங்கியது ஏன் என்றும் கேள்வி எழுப்பினர். இதனை தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலர், நிலஅளவையர் உள்ளிட்ட வருவாய்த்துறையினர் பாபிசிம்ஹா மற்றும் பிரகாஷ்ராஜ் ஆகியோரின் கட்டிடங்கள் மற்றும் இடங்களை ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் வனத்துறையினரும் ஈடுபட்டனர். அளவீடு செய்யப்பட்ட அறிக்கையை திண்டுக்கல் கோட்டாட்சியர் ராஜாவிடம் வழங்க உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து மண்டலதுணைவட்டார வளர்ச்சி அலுவலர் பாண்டிகுமார் பிரசாத் தெரிவிக்கையில், கொடைக்கானலில் 2400சதுரடிக்குமேல் கட்டிடம் கட்ட அனுமதி கிடையாது. ஆனால் தற்போது நடிகர்கள் கட்டி வரும் 2 கட்டிடங்கள் வரைபட அனுமதிக்கு மேல் கட்டியுள்ளது. இது குறித்து வில்பட்டி ஊராட்சி நிர்வாகம் சார்பில் நோட்டீஸ் வழங்கப்பட உள்ளது. வனத்துறை இடங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை என தெரிவித்துள்ளனர். நடிகர் பிரகாஷ்ராஜ் கட்டிடம் கட்ட அனுமதி பெறவில்லை. பாபிசிம்ஹா தனது தாயார் பெயரில் உள்ள இடத்தை புதுப்பித்து வீடு கட்டி வருகிறார். ஆனால் அதற்கும் அனுமதி பெற்றுள்ளாரா என தெரியவில்லை. 2 பேரிடமும் நோட்டீஸ் அளித்து விரைவில் விசாரணை நடத்தப்படும் என்றார்.

# நீதிக்கும், தர்மத்திற்கும், உண்மைக்கும் கிடைத்த தீர்ப்பு: எடப்பாடி பழனிசாமி

எடப்பாடி, ஆக. 26

அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. அ.தி.மு.க. பலமாக உள்ளது. ஒரு குற்றவாளியை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு கார் ஓட்டுநராக இருந்தார் என்று கூறுவது தவறு.



அ.தி.மு.க. பொதுக்குழு செல்லும் என சென்னை ஐகோர்ட்டு தீர்ப்பு அளித்ததை தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது சொந்த ஊரான சேலம் மாவட்டம் சிலுவம்பாளையத்தில் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள்வழங்கி கொண்டாடினார். பின்னர் எடப்பாடி பழனிசாமி பேட்டி அளித்தார். அவர் நிருபர்களிடம் கூறியதாவது: அ.தி.மு.க பொதுக்குழு கூட்டம் தொடர்பான உயர்நீதிமன்ற தீர்ப்பினால் நீதி, தர்மம், உண்மை வென்றுள்ளது. அ.தி.மு.க பொதுக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது. அ.தி.மு.க. பலமாக உள்ளது. வருகிற பாராளுமன்றத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றியை பெறும். தேசியளவில் தேசிய ஜனநாயக கட்சி கூட்டணியில் அங்கம் வகிக்கிறது. தமிழகத்தில் அ.தி.மு.க தலைமையில் கூட்டணி இருக்கும். இந்த கூட்டணி மகத்தான வெற்றிபெறும். அ.தி.மு.க தீர்ப்பு நீதிக்கும், தர்மத்திற்கும், உண்மைக்கும் கிடைத்த தீர்ப்பு. எங்களிடம் நியாயம் இருந்தது. அதனால் தீர்ப்பு கிடைத்துள்ளது. கொடநாடு வழக்கில் என்னை சம்பந்தப்படுத்தி பேசுவது தவறான விஷயம். ஒரு ஆட்சி இருக்கும்போது பல்வேறு சம்பவங்கள் நடைபெறும். அந்த சம்பவத்தை சட்டரீதியாக அரசு அணுகி நடவடிக்கை எடுத்துள்ளது. வேண்டுமென்றே இன்றைய ஆட்சியாளர்கள் திரித்து அவர்களுக்கு சாதகமாக சூழ்ச்சி செய்கிறார்கள். அது ஒருபோதும் நடக்காது. அ.தி.மு.க. சட்டத்தின் ஆட்சி நடத்தியது. அதை உணர்ந்து கொள்ள வேண்டும். தனபால் பல்வேறு வழக்குகளில் தொடர்புடையவர், இதே இன்றைய ஆட்சியாளர்களே விசாரணைக்கு அழைத்து சென்று 3 மாதங்கள் சிறையில் அடைத்தனர். நில அபகரிப்பில் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு ஜாமீனில் வந்தவர். முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஓட்டுநர் என்று கனகராஜை இனி யாரும் சொல்லக்கூடாது. அவர் சசிகலாவின் ஓட்டுநராக இருந்தவர், மீறி ஜெயலலிதாவின் ஓட்டுநர் என கூறினால் நீதிமன்றத்தின் வழியாக வழக்கு தொடர்வோம், கனகராஜ் ஒருநாள் கூட ஓட்டுனராக கனகராஜ் இருந்தவர் இல்லை. ஒரு குற்றவாளியை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு கார் ஓட்டுநராக இருந்தார் என்று கூறுவது தவறு. கொடநாடு வழக்கு நீதிமன்றத்தில் சட்டரீதியாக நடைபெற்று வருகிறது. அதைப்பற்றி பேசுவதேதவறு, நீதிமன்றத்தில் வழக்கு இருப்பவர்கள் மீது பேசுவது வழக்கிற்கு குந்தகம் விளைவித்து விடும். பாராளுமன்ற தேர்தலுக்கு 9 மாதங்கள் இருக்கிறது. தேர்தலுக்கான அடிப்படை பணிகளை மேற்கொண்டு வருகிறோம். பூத் கமிட்டி அமைப்பது உள்ளிட்ட பணிகளை செயல்படுத்தி வருகிறோம். மதுரையில் எழுச்சி மாநாடு மிகச்சிறப்பாக நடைபெற்றது. தென்மாவட்டத்தில் நடத்த முடியாது என்று கூறினார்கள்.

ஆனால் 15 லட்சம்பேர் கலந்துகொண்டு தமிழக வரலாற்றில் எந்த ஒரு கட்சிக்கும் தொண்டர்கள், நிர்வாகிகள், மக்கள் கலந்து கொண்டது இல்லை. அந்த அளவிற்கு வரலாற்று சிறப்புமிக்க மாநாட்டை நடத்தி காட்டியுள்ளோம். இனியாரும் அ.தி.மு.க. இரண்டாக, மூன்றாக சென்றுவிட்டது என்று கூற வேண்டாம். ஒன்றாக இருக்கிறது என்று மாநாட்டின் மூலம் நிரூபித்து காட்டியுள்ளோம். நீதிமன்றம், தேர்தல் ஆணையம் உள்ளிட்டவைகள் மூலமாக தீர்ப்பு பெற்றுவிட்டோம். அ.தி.மு.க. எங்கள் தரப்பில் இருக்கிறது என்பது முழுமையாக உறுதிப்படுத்தி உள்ளோம். சந்திராயன்3 தரை இறங்கியது நாட்டிற்கு கிடைத்த வெற்றி. தமிழக விஞ்ஞானிகள் மற்ற நாட்டை சேர்ந்தவர்களுக்கு சலித்தவர்கள் அல்ல என்று நிரூபணம் ஆகி உள்ளது. இந்திய வல்லரசு நாடாக உயர்வதற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. இதற்கு தமிழகத்தை சேர்ந்த ஒருவர் முன்னே நின்று நிகழ்வை நிகழ்த்தியுள்ளார். அ.தி.மு.க சார்பாக அவருக்கு பாராட்டு தெரிவித்து விட்டோம். தமிழகத்தை சேர்ந்தவர் ஒருவர் மிகப் பெரிய சாதனையை படைத்துள்ளார். இது இந்தியாவிற்கு கிடைத்த பெருமை. ஒரு சிலரை தவிர்த்து அ.தி.மு.க.விற்காக உழைத்தவர்கள் பிரிந்து சென்றிருந்தால் கட்சிக்குக்குள் வர நினைத்தால் இணைத்துக் கொள்வோம்.

சிலர் கட்சியின் ரீதியாக வளர்ந்து அதிகாரத்திற்கு வந்து எப்படி இருக்கிறார்கள் என்று அனைவருக்கும் தெரியும். அப்படி வளர்ந்தவர்கள் கட்சிக்கு துரோகம் விளைவித்துள்ளனர். இன்றைய ஆளும் கட்சியுடன் சேர்ந்து அ.தி.மு.க.வை அழிக்க நினைத்தவர்கள் எட்டப்பராக செயல்பட்டவர்களுக்கு கட்சியில் இடம் இல்லை. அ.தி.மு.க தொண்டர்கள் நிறைந்த கட்சி தொண்டராக நின்று தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அதிமுக வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெறும். 2026 சட்டமன்றத் தேர்தலிலும் மிகப்பெரிய வெற்றி பெறும். இதில் எந்த மாற்றமும் கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

# காட்டுயானை வனத்துறையினர் காட்டுக்குள் விரட்டினர்

டி.என்.பாளையம், ஆக. 26

காட்டுயானை உணவு தேவைக்காக விவசாய தோட்டத்திற்குள் நுழைந்து வாழை, கரும்பு பயிர்களை சாப்பிட்டு செல்வது வழக்கமான நிகழ்வு. வனத்துறையினர் அந்த காட்டுயானையை சத்தமிட்டு வனப்பகுதிக்குள் விரட்டி அனுப்பினர்.




டி.என்.பாளையம் வனச்சரகத்திற்கு உட்பட்ட வனப்பகுதியில் இருந்து வெளியேறிய காட்டுயானை ஒன்று பங்களாப்புதூர் அருகே உள்ள எருமைக்குட்டை அண்ணாநகர் பகுதியில் உள்ள ஆறுமுகம் என்பவரது கரும்பு விவசாய நிலத்திற்குள் இன்று அதிகாலை சுமார் 5.30 மணியளவில் புகுந்தது. அப்பகுதியில் விவசாயிகள்சிலர்கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்களை பயிரிட்டு விவசாயம் செய்து வருகின்றனர். இதனால் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய காட்டுயானை உணவு தேவைக்காக விவசாய தோட்டத்திற்குள் நுழைந்து வாழை, கரும்பு பயிர்களை சாப்பிட்டு செல்வது வழக்கமான நிகழ்வு. இந்த நிலையில் யானை விவசாய நிலத்திற்குள் நுழைந்ததும் ஏற்கனவே ரோந்து பணியில் இருந்த டி.என்.பாளையம் வனத்துறையினர் அந்த காட்டு யானையை சத்தமிட்டு வனப்பகுதிக்குள் விரட்டி அனுப்பினர்.

# அதிமுக பொதுக்குழு தீர்மானம் செல்லும்: எடப்பாடி பழனிசாமிக்கு ஆதரவாக தீர்ப்பு

சென்னை, ஆக. 26

எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டம் கடந்த ஆண்டு ஜூலை 11 ந்தேதி நடந்தது. அந்த கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமிபொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் அ.தி.மு.க.வில் இருந்து ஓ.பன்னீர்செல்வத்தை நீக்கும் தீர்மானமும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் அ.தி.மு.க. முழுமையாக எடப்பாடி பழனிசாமி கைக்கு வந்தது. இது ஓ. பன்னீர் செல்வத்துக்கும், அவரது ஆதரவாளர்களுக்கும் கடும் அதிர்ச்சியை கொடுத்தது. இதையடுத்து அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லாது என்றும், இடைக்கால பொதுச்செயலாளர் தேர்தலுக்கு தடைவிதிக்கக் கோரியும், தங்களை கட்சியில் இருந்து நீக்கியது செல்லாது என அறிவிக்கக்கோரியும் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அவருடைய ஆதரவாளர்களான பி.எச். மனோஜ் பாண்டியன், ஆர். வைத்திலிங்கம், ஜே.சி.டி. பிரபாகரன் ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர்.





வழக்குகளை விசாரித்த தனி நீதிபதி, அ.தி.மு.க. பொதுக்குழு மற்றும் தீர்மானங்கள் செல்லும் என தீர்ப்பு அளித்தார். இந்த நிலையில் இந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவை எதிர்த்து சுப்ரீம்கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு, பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லுமா? செல்லாதா? என்பது குறித்துவிசாரிக்கசென்னை ஐகோர்ட்டுக்கு உத்தரவிட்டது. அதன்படி ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்டோர் சார்பில் தொடரப்பட்ட மேல்முறையீட்டு வழக்கு மீதான விசாரணை சென்னை ஐகோர்ட்டில் நீதிபதிகள் ஆர்.மகாதேவன், முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் நடந்தது. வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் கடந்த ஜூன் மாதம் 28ந்தேதி குறிப்பிடாமல் தள்ளி வைத்தனர். இந்த நிலையில் நீதிபதிகள் (வெள்ளிக்கிழமை) காலை தீர்ப்பளித்தனர். நீதிபதிகள் தீர்ப்பில் கூறியிருப்பதாவது: அ.தி.மு.க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் செல்லும். எடப்பாடி பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டதை கோர்ட்டு ஏற்றுக் கொள்கிறது.

பொதுக்குழு தீர்மானங்களை ஏற்பதாக சுப்ரீம் கோர்ட்டு ஏற்கனவே அறிவித்துள்ளது. எனவே அதற்கு தடைவிதித்து அறிவிக்க முடியாது. இப்போது தடைவிதித்தால் கட்சி செயல்பாடுகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். ஓ.பன்னீர்செல்வத்தை கட்சியில் இருந்து நீக்கியது தொடர்பாக எந்த தடையும் விதிக்க முடியாது. ஆகையால் ஓ.பன்னீர் செல்வமும், மற்றவர்களும் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு ஐகோர்ட்டு நீதிபதிகள் தீர்ப்பில் கூறி உள்ளனர். இந்த தீர்ப்பு காரணமாக ஓ.பன்னீர்செல்வத்துக்கு மிகப்பெரிய பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

# மூளை காய்ச்சலால் பாதிப்பு: அரபு நாட்டில் தவித்த தமிழரை 24 மணி நேரத்தில் மீட்ட தமிழக அரசு

சென்னை, ஆக. 26

பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த ஷபியுல்லா அப்துல் என்பவர் அரபு நாட்டில் வேலை செய்து வந்தார். அங்கு அவரது உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டது. அவருக்குஅங்குசிகிச்சை பெற முடியாத நிலை ஏற்பட்டது. அதற்கான வசதியும் இல்லை. இதனால் அவரது பெற்றோர்வெளிநாடுவாழ் அமைச்சர் செஞ்சி மஸ்தானை சந்தித்து சபியுல்லாவை காப்பாற்ற வேண்டும். அவருக்கு ஏற்பட்டுள்ள மூளை காய்ச்சல் பாதிப்பில் இருந்து பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் அரபு நாட்டில் இருந்த சபியுல்லாவை தமிழகத்திற்கு அழைத்து வந்து சிகிச்சை அளிக்க தமிழக அரசு தீவிர முயற்சி மேற்கொண்டது. மத்திய வெளியுறவுத் துறையுடன் பேசி அங்குள்ள தமிழக தூதரகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவரை சென்னை அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டது. அமைச்சர் செஞ்சி மஸ்தானின் முயற்சியால் சபியுல்லா நேற்றிரவு விமானம் மூலம் சென்னை வந்தார். அங்கு தயாராக இருந்த ஆம்புலன்ஸ் மூலம் ராஜீவ்காந்தி அரசு ஆஸ்பத்தரிக்கு கொண்டு வரப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார். மருத்துவமனை டீன் தேரணிராஜன் அறிவுறுத்தலின் பேரில் தயாராக இருந்த மருத்துவ குழுவினர் சபியுல்லாவிற்கு முதல் கட்ட மருத்துவசிகிச்சைஅளித்தனர். அவருக்கு தொடர்ந்து மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஷபியுல்லாவின் தொண்டையில் ஓட்டை போடப்பட்டு அதன் வழியாக திரவ உணவு வழங்கப்படுகிறது. 24 மணி நேரத்தில் அரசு எடுத்த முயற்சியால் அவர்பாதுகாப்பாக சென்னையில் சிகிச்சைபெற்று வருகிறார். அவரது உடல் நிலையை டாக்டர்கள் தொடர்ந்துகண்காணித்து வருகின்றனர்.



# அலுவலக நேரங்களில் நெரிசலில் திணறும் காளவாசல், அரசரடி சிக்னல்கள்

மதுரை, ஆக. 26

மதுரை மாநகரின் மிக முக்கிய சிக்னல்களில் ஒன்று காளவாசல். மதுரையின் நான்கு புறங்களிலும் இருந்தும் வரும் வாகனங்களின் முக்கிய சந்திப்பாக காளவாசல் சந்திப்பு உள்ளது. பைபாஸ் ரோட்டில் அமைந்திருப்பதால் எந்த நேரத்திலும் வாகன போக்குவரத்துஇருந்துகொண்டே இருக்கும். குறிப்பாக மேற்கு பகுதிகளில் இருந்தும், பெங்களூர் 4 வழிச்சாலை யில் இருந்தும், அச்சம்பத்து, துவரிமான் வழியாக வரும் வாகனங்கள் காளவாசல் சந்திப்பை கடந்தே நகருக் குள் செல்ல வேண்டும். மேலும் கேரளா, கம்பம், தேனி, உசிலம்பட்டி பகுதிகளில் இருந்து அரசு மற்றும் தனியார் பஸ்கள் ஆரப்பாளையம் பஸ் நிலையத்திற்கு செல்வதற்கு காளவாசல் சிக்னலை கடந்தே செல்ல வேண்டும். இந்த நிலையில் முடக்குச்சாலையில் இருந்து காளவாசல் சிக்னல் வரை பெரும்பாலான நேரங்களில் போக்குவரத்து நெரிசல் இருந்து கொண்டே இருக்கிறது. மேலும் சிக்னலின் அருகிலேயே ஷேர் ஆட்டோக்கள் வரிசையாக ரோட்டை மறித்து நிறுத்தப்படுகின்றன. இதனாலும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இந்த நிலையில் கடந்த ஆட்சி காலத்தில் காளவாசல் சிக்னலில் கூட்டல் குறியீடு வடிவில் பாலம் அமைக்க திட்டமிடப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களால் அந்த திட்டம் மாற்றியமைக்கப்பட்டு பைபாஸ் ரோட்டில் மட்டும் சிக்னலை கடந்து செல்லும் வகையில் பாலம் அமைக்கப்பட்டது. ஆனால் அந்த பாலத்தை பயன்படுத்தும் வாகனங்களில் எண்ணிக்கை எதிர்பார்க்கப்பட்டதை காட்டிலும் குறைவாகவே உள்ளதாக அந்த பகுதி மக்கள் தெரிவித்து வந்தனர். சிக்னல் இருந்தபோதும் பாலத்தின் கீழ் பகுதியில் செல்வதையே வாகன ஓட்டிகள் விரும்பினர். இந்த நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்பு முடக்குச்சாலையில் இருந்து 4 வழிச்சாலைக்கு எளிதாக செல்லும் வகையில் பாலம் அமைக்கும் பணிகள் தொடங்கின. இதனால் போக்குவரத்து நெரிசல் மேலும் அதிகமானது. இதை யடுத்து காளவாசல் சிக்னலில் இரும்பு தடுப்புகள் வைக்கப்பட்டு பொன்மேனி பைபாஸ்ரோட்டில் இருந்து குருதியேட்டர்வழியாக செல்லும் வாகனங்கள் பாலத்தின் மீது செல்லும் வகையில் போக்குவரத்து மாற்றியமைக்கப்பட்டது. அதன் பிறகும் பல வாகன ஓட்டிகள் சிக்னலில் காத்திருந்து பாதசாரிகள் செல்லும் பாதையில் சென்று ஆரப்பாளையம் ரோட்டிற்கு சென்று வருகின்றனர். இதனால் போக்கு வரத்துக்கும், பாதசாரிகளுக்கும் இடையூறு ஏற்படுகிறது. மேலும் மேற்கு பகுதியில் இருந்து வரும் ஆம்புலன்சுகள் காளவாசல் சிக்னலில் இருந்து இடதுபுறம் திரும்பி ஆரப்பாளையம்செல்லூர் பாலம் வழியாகவும், மத்திய சிறைச்சாலை வழியாகவும் அரசு ஆஸ்பத்திரிக்கு எளிதாக செல்ல முடியும். ஆனால் அரசரடி சிக்னல் பகுதி குறுகியதாக இருப்பதால் அங்கும் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் நேரங்களில் ஆம்புலன்சுகள் சிக்னலை கடப்பது பெரும் சிரமமாக உள்ளது. சிக்னல் அருகே பயன்பாட்டில் இல்லாத கட்டிடத்தை அப்புறப்படுத்தி அந்த பகுதியில்ஏற்படும்நெரிசலுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும். மேலும் போக்குவரத்து போலீசார் சிக்னலை மாற்றியோ அல்லது வாகனங்களை ஒழுங்குப்படுத்தியோ ஆம்புலன்சுகளை கடந்து செல்ல வைக்க வேண்டிய நிலை உள்ளது. இந்த நிலையில் காளவாசலில் இருந்து மேற்கு பகுதி நோக்கி செல்லும் வாகனங்களை பொருத்தவரை காளவாசல் பஸ் நிறுத்தத்தை வெளியூர் மற்றும் உள்ளூர் பஸ்கள் பயன்படுத்துகின்றன. ஆனால் இங்கு இருந்த பஸ் நிறுத்த நிழற்குடையை அகற்றி விட்டதால் பஸ்களை எங்கு நிறுத்துவது என்பதில் தொடர்ந்து சந்தேகம் இருந்து வருகிறது. இதனால் சிக்னல் வளைவில் (தேனி ரோட்டில்) அரசு மற்றும் தனியார் பஸ் மற்றும் ஷேர் ஆட்டோக்களை நிறுத்தி பயணிகளை ஏற்றி இறக்குவதால் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதை அங்கு போக்குவரத்தை கண்காணித்து வரும் போக்குவரத்து போலீசார் கண்டு கொள்வதில்லை. டிரைவர்கள் ஒவ்வொரு இடத்தில்பஸ்களைநிறுத்தி பயணிகளை ஏற்றி செல்கின்றனர். இதனால் எங்கு நின்று பஸ் ஏறுவது என தெரியாமல் பயணிகள் அவதிப்படுகின்றனர். மேலும் பஸ் நிறுத்தும் இடங்களை மறித்து ஷேர்ஆட்டோக்கள் நிறுத்தி வைத்து பயணிகளை ஏற்றுகின்றனர். இதனால் அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. காளவாசல் சிக்னலில் தனி போலீஸ் கண்காணிப்பு அறை இருந்தபோதும் 4 புறங்களிலும் வாகனங்களை கண்காணித்து ஒழுங்குப் படுத்த வேண்டி உள்ளதால் அவர்களும் சிரமத்திற்குள்ளாகின்றனர். தொடர்ச்சியாக மைக்கில் அறிவிப்பு செய்தும் சிக்னல் அருகில் நின்றும் வாகனங்களை ஒழுங்குப்படுத்தும் நிலையிலும் பலர் விதிகளை மீறி சென்று போக்குவரத்து இடையூறு செய்கின்றனர். தற்போது நடந்துவரும் பாலப்பணிகள் முடிவடையும் பட்சத்தில் அந்த சாலையில் வாகன போக்குவரத்து மேலும் அதிகரிக்கும். இதனால் போக்குவரத்து நெரிசலுக்கான வாய்ப்பு மேலும் அதிகரிக்கக்கூடும். எனவே காளவாசல் சிக்னலில் போக்குவரத்து நெரிசல் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண உயர்அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் தொடர்ச்சியாக கோரிக்கை வைத்து வருகின்றனர்.



# ஆறுமுகநேரியில் விஷம் வைக்கப்பட்ட உணவை தின்றதால் 5 மாடுகள் பலி

ஆறுமுகநேரி, ஆக. 26

விஷம் வைக்கப்பட்ட வாழைப்பழங்களை தின்று விட்டு மாடுகள் இறந்து போகும் சம்பவங்கள் இப்பகுதியில் தொடர்வதாக பொது மக்கள் கூறுகின்றனர். மாடுகளின் உரிமையாளர்கள் அளித்த புகாரின் பேரில் ஆறுமுகநேரி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரி பகுதியில் வீடுகளில் வளர்க்கப்படும் மாடுகளை மேய்ச்சலுக்காக காலையில் அவிழ்த்து விடுவதும் அவை மீண்டும் மாலையில் வீடு திரும்புவதும் வழக்கம். இந்த மாடுகள் ஆறுமுகநேரியின் மேற்கே அமைந்துள்ள குளக்கரை மற்றும் அதனை சுற்றியுள்ள வயல்காடு அருகே மேய்ச்சல் இடங்களுக்கு சென்று வரும். இதன்படி நேற்று காலையில் மேய்ச்சலுக்கு சென்ற மாடுகளில் பல இரவு ஆன பிறகும் வீடு திரும்பவில்லை. இதனால் அவற்றின் உரிமையாளர்கள் தேடிச் சென்றனர். அப்போது மூலக்கரைக்கு செல்லும் சாலையின் இருபுறமும் ஆங்காங்கே சில மாடுகள் இறந்து கிடந்ததையும், மேலும் சில மாடுகள் உயிருக்கு போராடிய நிலையிலும் இருந்ததையும் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இது குறித்து உடனடியாக ஆறுமுகநேரி அரசு கால்நடை டாக்டருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த அவர் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த 5 மாடுகளுக்கு அவசர சிகிச்சைகளை மேற்கொண்டார். இறந்து போன மாடுகளையும் அவர் ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறுகையில், விஷம் கலந்த உணவை உட்கொண்டதால் தான் இந்த மாடுகள் இறந்திருக்கின்றன. உடற்கூறு ஆய்வுக்கு பிறகுதான்முழுமையான விவரம் தெரியவரும் என்றார். விஷம் வைக்கப்பட்ட வாழைப்பழங்களை தின்று விட்டு மாடுகள் இறந்து போகும் சம்பவங்கள் இப்பகுதியில் தொடர்வதாக பொது மக்கள் கூறுகின்றனர். பாதிக்கப்பட்ட மாடுகளின் மொத்த மதிப்பு சுமார் ரூ.5 லட்சம் என்று கூறப்படுகிறது. சம்பவம் குறித்து மாடுகளின் உரிமையாளர்கள் அளித்த புகாரின் பேரில் ஆறுமுகநேரி போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கோத்தகிரியில் நடைபாதையில் நிறுத்தப்படும் வாகனங்கள்

கோத்தகிரி, ஆக. 26

கோத்தகிரி, சுற்றுவட்டாரங்களில் உள்ள சுமார் 300 மேற்பட்ட குக்கிராமங்களுக்கு மையப்பகுதியாக அமைந்துள்ளது. இங்கு தாசில்தார் அலுவலகம், கோர்ட்டு, அரசு கருவூலம், போலீஸ் நிலையம், பேரூராட்சி, ஊராட்சி அலுவலகங்கள், பத்திரப் பதிவு அலுவலகம், அரசு மற்றும் தனியார் பள்ளிகள், பாலிடெக்னிக் மற்றும் கல்லூரிகள் அமைந்துள்ளதால் கோத்தகிரி நகர் பகுதி போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் நெரிசல் மிகுந்து காணப்படுகிறது. மேலும் கோத்தகிரி பகுதியில் பெருகி வரும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாகன நிறுத்துமிடமும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே வாகன ஓட்டிகள் தங்களது வாகனங்களை போக்குவரத்திற்கு இடையூறாக ஆங்காங்கே நிறுத்திவிட்டு செல்கின்றனர். இதனால் அவ்வப்போது கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் பொதுமக்கள் நடைபாதையை விட்டு இறங்கி ரோட்டில் நடந்து செல்ல வேண்டிய சிரமமும் உள்ளது. எனவே நடைபாதைகளில் நிறுத்தப்படும் வாகனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக்கொண்டனர்.



# கதை கேட்காமல் சந்திரமுகியாக நடித்த கங்கனா.. ஏன் தெரியுமா?

'சந்திரமுகி 2' திரைப்படம் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. இப்படத்தில் சந்திரமுகியாக கங்கனா நடிக்கிறார். இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதாநாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் கதை கேட்காமலேயே சந்திரமுகியாக நடிக்க கங்கனா ஒப்புக் கொண்டதாக இயக்குனர் பி. வாசு கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, கங்கனாவிடம் இந்திப் படம் ஒன்றின் கதையை சொல்ல சென்றதாகவும் அப்போது 'சந்திரமுகி 2' படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வருவதையும் அதில் சந்திரமுகி கதாபாத்திரத்தில் நடிக்க யாரையும் முடிவு செய்யவில்லை என்று தெரிந்ததும் நானே நடிக்கிறேன் என்று கங்கனா ஒப்புக் கொண்டதாகவும் அவர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.






# தேசிய விருதுகள்.. தசாப்தத்தின் மிக மோசமான தேர்வு காஷ்மீர் ஃபைல்ஸ்... பி.சி.ஸ்ரீராம் காட்டம்!

ஒளிப்பதிவாளர் பி.சி. ஸ்ரீராம் தேசிய விருது வென்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து உள்ளார். காஷ்மீர் ஃபைல்ஸ் படத்திற்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டதற்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கண்டனம். இந்திய அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த படங்கள், நடிகர், நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்கள் அடங்கிய திரைத் துறை சார்ந்தவர்களுக்கு தேசிய திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன்படி 69வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் நடைபெறவுள்ளது. இந்த விழாவில் 2021ஆம் ஆண்டிற்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன. இதையடுத்து தேசிய விருது பெறும் படங்களின் பட்டியல் நேற்று வெளியானது. இதில் தேசிய விருது வென்றவர்களுக்கு பலதரப்பினரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். திரைத்துறை சார்ந்த பிரபலங்கள், நட்சத்திரங்கள், அரசியல் தலைவர்கள் தேசிய விருது வென்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். இந்த முறை தேசிய விருது அறிவிக்கப்பட்டதும், ரசிகர்கள்ஆவலுடன்எதிர்பார்த்தபடங்களுக்குவிருதுஅறிவிக்கப்படாததற்குஏமாற்றத்தையும்,வருத்தத்தையும் வெளிப்படுத்தி வருகின்றனர். மேலும் பலர், இந்த படத்திற்கு விருது அறிவிக்கப்பட்டு இருக்கக் கூடாது என்று சமூக வலைதளங்களில் கருத்து பதிவிட்டு வருகின்றனர். அந்த வகையில், தேசிய விருது வென்றவர்களுக்கு நாட்டின் முன்னணி ஒளிப்பதிவாளரான பி.சி. ஸ்ரீராம் தேசிய விருது வென்றவர்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்து உள்ளார். இதுகுறித்து எக்ஸ் (முன்பு டுவிட்டர்) தளத்தில் அவர் பதிவிட்டுள்ளார். அதில், "தேசிய விருது வென்ற அனைவருக்கும் வாழ்த்துக்கள். இந்த தசாப்தத்தின் மிக மோசமான படமாக காஷ்மீர் ஃபைல்ஸ் தேர்வுசெய்யப்பட்டுஇருக்கிறது,"என்றுகுறிப்பிட்டுள்ளார்.முன்னதாகதிகாஷ்மீர்ஃபைல்ஸ்திரைப்படத்திற்கு தேசிய விருது அறிவிக்கப்பட்டு இருப்பதற்கு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தனது கண்டனத்தை தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.



# படை தலைவனாக மாறிய சண்முக பாண்டியன்...

சண்முகபாண்டியன்புதியபடம்ஒன்றில்நடிக்கிறார். இப்படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார். மதுரை வீரன் படத்தின் வெற்றிக்குப் பிறகு நாயகன் சண்முக பாண்டியன் புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். "வால்டர்", "ரேக்ளா" படத்தை இயக்கிய அன்பு இயக்கத்தில் உருவாகும் இப்படத்தில் கஸ்தூரி ராஜா, எம் எஸ் பாஸ்கர், யாமினி சந்தர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். டிரைக்டர்ஸ் சினிமாஸ் தயாரிக்கும் இப்படத்திற்கு இளையராஜா இசையமைக்கிறார்.

புதுமையான திரைக்கதையில் முழுக்க முழுக்க காட்டுக்குள் நடக்கும் கதைக்களத்தில் பரபரப்பான திருப்பங்களுடன் இப்படத்தின் திரைக்கதை உருவாக்கப்பட்டுள்ளது. இதையடுத்து,

இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் பூஜையுடன் தொடங்கியது. இதில், விஜயகாந்த் மனைவி பிரேமலதா விஜயகாந்த் கலந்துகொண்டு, படக்குழுவினரை வாழ்த்தினார்.

இந்நிலையில், இப்படத்தின் டைட்டில் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படத்திற்கு 'படை தலைவன்' என படக்குழு தலைப்பு வைத்துள்ளது. இது தொடர்பான கிளிம்ப்ஸ் வீடியோ இணையத்தில் ட்ரெண்டாகி வருகிறது.

# உலகக் கோப்பையை அறிமுகப்படுத்திய முதல் இந்திய நடிகை மீனா நெகிழ்ச்சி






இன்ஸ்டாபக்கத்தில்உலகக்கோப்பையைவைத்து எடுத்த புகைப்படங்களை நடிகை மீனா ஷேர் செய்துள்ளார். ஈஃபிள் டவருக்கு கீழே நின்று உலகக் கோப்பையுடன் நடிகை மீனா எடுத்துக் கொண்ட புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்தியாவில் வரும் அக்டோபர் மாதம் ஐசிசி ஒருநாள் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ளது. இந்த தொடருக்கான பயிற்சி ஆட்டங்கள் குறித்த அட்டவணை சில நாட்கள் முன்னர் அறிவிக்கப்பட்டது. இந்த தொடருக்காக இந்திய அணி வீரர்கள் நேற்று பயிற்சி முகாமை தொடங்கினர். இந்த முகாமில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் உலகக் கோப்பை தொடரை முன்னிட்டு பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உலகக் கோப்பை 2023ஐ நடிகை மீனா அறிமுகப்படுத்தி உள்ளார். ஈஃபிள் டவருக்கு கீழே நின்று உலகக் கோப்பையுடன் நடிகை மீனா எடுத்துக் கொண்ட புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அவரது இன்ஸ்டா பக்கத்தில் உலகக் கோப்பையை வைத்து எடுத்த புகைப்படங்களை ஷேர் செய்துள்ள நடிகை மீனாவிரைவில்நடைபெறஉள்ளஆண்களுக்கானஉலகக்கோப்பைகிரிக்கெட்போட்டியின்வெற்றிக்கோப்பையை அறிமுகப்படுத்தும் பாக்கியம் எனக்கு கிடைத்ததில் மகிழ்ச்சி எனக் கூறியுள்ளார். இதுவரை எந்தவொரு இந்திய நடிகருக்கும் கிடைக்காத பெருமைக்குரிய அங்கீகாரம் எனக்கு கிடைத்திருப்பதில் ரொம்பவே மகிழ்ச்சியாக உள்ளேன் என நடிகை மீனா தெரிவித்துள்ளார். கணவர் வித்யாசாகர் மறைவுக்கு பிறகு நடிகை மீனாவுக்கு திரையுலகமே ஒன்று திரண்டு நிகழ்ச்சி நடத்தி உற்சாகப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.



# தொடர்ந்து வசூல் சாதனை படைக்கும் ஜெயிலர்

ரஜினி நடிப்பில் சமீபத்தில் வெளியான திரைப்படம் 'ஜெயிலர்'. இப்படத்திற்கு பிரபலங்கள் பலர் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர். இயக்குனர் நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'ஜெயிலர்'. இப்படம் ஆகஸ்ட் 10ஆம்தேதிதிரையரங்குகளில்வெளியாகிநல்லவரவேற்பை பெற்று வருகிறது. 'ஜெயிலர்' திரைப்படத்தில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட திரைப்பிரபலங்கள் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளதால் ரசிகர்கள் இப்படத்தை திரையரங்குகளில் கொண்டாடி வருகின்றனர்.

ஜெயிலர் போஸ்டர் மேலும், 'ஜெயிலர்' திரைப்படத்திற்கு முதலமைச்சர் மு.கஸ்டாலின், கமல்ஹாசன், விஜய் என பிரபலங்கள் பலர் தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர். இந்நிலையில், இப்படத்தின் வசூல் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, 'ஜெயிலர்' திரைப்படம் ரூ.525 கோடிக்கு மேல் வசூல் குவித்துள்ளது. இதனை படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

# ஆசிய கோப்பைக்கு ரெடி.. நெட்ஸ்இல் பட்டையை கிளப்பிய கே.எல். ராகுல்!






ஆசிய கோப்பை தொடருக்கு தயாராகும் வகையில் இந்திய வீரர்களுக்கு 6 நாள் பயிற்சி முகாம். கேப்டன் ரோகித் ஷர்மா, அஜித் அகார்கர் ஆகியோர் கூர்ந்து கவனித்தனர்.

ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டி வருகிற 30ம் தேதி முதல் செப்டம்பர் 17ம் தேதி வரை நடைபெற இருக்கிறது. ஆசிய கோப்பை 2023 தொடர் இலங்கை மற்றும் பாகிஸ்தான் என இரண்டு நாடுகளில் நடக்கிறது. இதில் பங்கேற்கும் ரோகித் சர்மா தலைமையிலான 17 பேர் கொண்ட இந்திய அணி சில தினங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. ஆசிய கோப்பை போட்டிக்கு சிறந்த முறையில் தயாராவதற்காக இந்திய அணி வீரர்களுக்கு ஆறு நாட்கள் பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி முகாம் பெங்களூரு அருகே உள்ள ஆலூரில் நேற்று தொடங்கியது.

கேப்டன் ரோகித் சர்மா, விராட் கோலி, காயத்தில் இருந்து மீண்டுள்ள ஸ்ரேயாஸ் அய்யர், லோகேஷ் ராகுல், ஹர்திக் பாண்ட்யா உள்ளிட்டோர் முகாமில் பங்கேற்றுள்ளனர். இன்றைய பயிற்சியில் கே.எல். ராகுல் கலந்து கொண்டார். முதலில்தான்கடந்தசிலவாரங்களாகசெய்துவரும்வழக்கமானஉடற்பயிற்சிகளை மேற்கொண்டார் கே.எல். ராகுல். அதன் பிறகு, நெட்ஸ்இல் பேட்டிங் செய்ய களமிறங்கினார். இவருக்கு ஷர்துல் தாக்கூர் மற்றும் ஆகாஷ் தீப் ஆகியோர் பந்து வீசினர். துவக்கம் முதலே அதிரடியாக ஆடிய கே.எல். ராகுல், உடலில் எந்த இடையூறும் ஏற்பட்டதாக காட்டிக் கொள்ளவில்லை.

கே.எல். ராகுல் பயிற்சியில் ஈடுபடுவதை கேப்டன் ரோகித் சர்மா மற்றும் அஜித் அகார்கர் ஆகியோர் கூர்ந்து கவனித்து வந்தனர். வேகப்பந்து வீச்சை தொடர்ந்து அக்சர் பட்டேல் மற்றும் மயான்க் மார்கன்டே ஜோடி கே.எல். ராகுலுக்கு பந்துவீசியது. இவர்களின் பந்துவீச்சில் கே.எல். ராகுல் பல்வேறு ஷாட்களை அடித்தார். இதில் ஸ்வீப் மற்றும் ரிவர்ஸ் ஸ்வீப் உள்ளிட்ட ஷாட்களும் அடங்கும்.

# உலக தடகள சாம்பியன்ஷிப் நீரஜ் சோப்ரா இறுதிப்போட்டிக்கு தகுதி

அடுத்த ஆண்டு பாரிசில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு நீரஜ் சோப்ரா நேரடியாக தகுதி பெற்றார். இந்த ஆண்டு 90 மீட்டர் ஓட்டத்தை எவரும் தாண்டவில்லை.

19வது உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடந்து வருகிறது. இன்று ஆடவர் ஈட்டி எறிதல் போட்டி நடைபெற்றது. இதில், இறுதிப்போட்டிக்கு தகுதி பெற 83.00 மீட்டர் வீச வேண்டும். ஆனால் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா முதல் முயற்சியிலேயே 88.77மீ. தூரத்தை எட்டி இறுதிப்போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்றுள்ளார். இறுதிப்போட்டி வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. இதன் மூலம் அடுத்த ஆண்டு பாரிசில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கும் நீரஜ் சோப்ரா தகுதி பெற்றார்.




# 36 வயதில் மரணமடைந்த WWE சாம்பியன் அதிர்ச்சியில் ரசிகர்கள்

இவர் இதுவரை 2 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். அவரது மறைவிற்கு WWE அமைப்பு தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் இரங்களை தெரிவித்துள்ளது.

WWE மல்யுத்த போட்டிகளில் அனைவரது கவனத்தையும் ஈர்த்தவர் ப்ரே வியாட் என்றே சொல்லலாம். அவர் களத்திற்குள் எண்ட்ரி கொடுக்கும் ஸ்டைலை குழந்தைகள் பார்த்தால் பயப்படுவார்கள். அண்டடெக்கர் போல இருட்டில் எண்ட்ரி கொடுப்பார். ப்ரே வியாட் WWE மல்யுத்த போட்டிகளில் 2009ம் ஆண்டு அறிமுகமானார்.

இவர் இதுவரை 2 முறை சாம்பியன் பட்டம் வென்றுள்ளார். கடந்த சில மாதங்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு போட்டிகளில் கலந்து கொள்ளாமல் இருந்தார்.

இந்நிலையில் இன்று அதிகாலை அவர் உயிரிழந்ததாக பிரபல முன்னாள் WWE வீரர் டிரிபிள் ஹெச் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: புகழ்பெற்ற WWE வீரர் ப்ரே வியாட்டின் தந்தையிடம் இருந்து தற்போது ஒரு அழைப்பு வந்தது. எங்கள் WWE உறுப்பினர் ப்ரே வியாட் நெஞ்சுவலியால் இன்று அதிகாலை உயிரிழந்தார் என்ற சோக செய்தியை எங்களுக்கு அவர் தெரிவித்தார். அவரது குடும்பத்திற்காக நாங்கள் பிராத்தனை செய்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

அவரது மறைவிற்கு WWE அமைப்பு தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் இரங்களை தெரிவித்துள்ளது.



Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.